ஜப்பான் தூதராலயம்

இல. 20, கிறகறீஸ் வீதி, கொழும்பு 7 ஸ்ரீலங்கா
தொலைபேசி: +94-11-2693831-3, தொலைநகல்: +94-11-2698629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

## பத்திரிகை அறிக்கை
## புரட்டாதி 12ம் திகதி 2014

# ஜப்பான் ஆதரவளிக்கும் மீள் குடியமர்ந்த மக்களுக்கான ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனமூடான ஒரு வாழ்வாதார மேம்பாட்டு திட்டம்

“ முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்திரும்பிய மீன்பிடி சமூக மக்களின் சமுதாய மீள்நிர்மாணம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக” ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ள அமெரிக்க டொலர் 224,380 (ஏறத்தாழ ரூபா. 30 மில்லியன்) உதவி, ஜப்பான்-அரசசார்பற்ற நிறுவன ஒத்துழைப்பு உதவித்திட்டத்தின் கீழ் பாசிக் நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பாசிக் நிறுவனமானது 2004 ஆண்டு தொடக்கம் வடமாகாணத்தில் மீள் நிர்மாணம் மற்றும் மேம்பாட்டு (உதவி) நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவரும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஒரு அரசசார்பற்ற நிறுவனம்.

இந்த திட்டமானது மீள் குடியமர்ந்த மீன்பிடி சமூகத்தினைச் சேர்ந்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கானது. இப் பிரதேசத்தில் பாசிக் நிறுவனம் 18 பொது கிணறுகளையும் 3 பொது மண்டபங்களையும் 2013ம் ஆண்டு முதல் அமைத்து வழங்கியுள்ளது. இப் பொது மண்டபங்கள் மாணவர்களுக்கான மொழிக்கல;வியை வழங்கிக்கொண்டிருக்கும் இடமாகவும் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும் இடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. மீள் திரும்பிய மக்களின் அடிப்படை வாழ்க்கைமுறை உட்கட்டமைப்புகளின் குறைபாட்டிலிருந்து அவர்களை விரைவில் ஒற்றுமையுடன் மீண்டெழ இது உதவியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மூன்று மீன் சந்தை கட்டடங்களை கரைதுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு வழங்குகின்றது.

உலகளாவிய சமாதானம் மற்றும் சுபீட்சத்திற்கான முன்முயற்சிகளுக்கு வலுவாக ஆதரவளித்து ஜப்பான் தன்னை அர்ப்பணிக்கின்றது எனவே, நாட்டின் வளர்ச்சியினை நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் வகையில் ஸ்ரீலங்காவின் தேசிய மீள் இணக்கத்தின் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கின்றது. இந்த வகையில், ஜப்பான் சமாதான முன்னெடுப்பிற்கு ஒரு முக்கியமான பங்குதாரராகவும் மற்றும் தன்னுடைய கணிசமான ஆதரவினை வடமாகாணப் பகுதிகளை மீள்நிர்மாணிக்கவும் கட்டியெழுப்பவும், மக்களின் நலன்களுக்கு அதிகளவு முன்னுரிமை கொடுத்து வழங்கி வருகின்றது.

இத் திட்டம் பற்றி பாசிக் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் செல்வி ஈரோ கருத்துக் கூறுகையில் இந்த திட்டத்தின் நோக்கமானது பிரதேசத்தில் உள்ள மீனவ சமூகங்களை வலுப்படுத்துவது ஆகும். போர்கால இடம்பெயர்வு அனுபவங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களுக்கான பற்றாக்குறை இருந்த போதிலும் சில மீனவ சமூகங்கள் மிகவும் நல்ல முறையில் மீளவும் தங்களை கட்டியெழுப்ப ஆரம்பித்துள்ளதுடன் தங்கள் கூட்டுறவுச்செயற்பாடுகளினையும் மீள ஆரம்பித்துள்ளன. இத் திட்டம் மீளவும் மக்களை வலுப்படுத்த விரைவுபடுத்துவதுடன் இத் திட்டத்தின் செயற்பாடுகளின் ஊடாக எல்லா மீனவ சமூகங்களும் அவர்களுடைய வலுவினை மீளவும் பெற்றுக்கொள்ள முடியும் என நாங்கள் நம்புகின்றோம். 20 வருடங்களுக்கு மேலாக தங்களுடைய இடங்களுக்கு மீண்டும் திரும்பி வந்துள்ள சமூகத்திலுள்ள அனைவரும் உங்களுடைய வாழ்வினைக் கட்டியெழுப்புவதில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பீர்கள் மற்றும் இந்த திட்டம், சமூகத்திலுள்ளோரின் அவ்வாறான விருப்பங்களுக்கு ஆதரவளிக்கும்

இந்த உதவிக்கான ஒப்பந்தம் அதிமேதகு திரு.நொபுஹிட்டோ ஹோபோ - ஜப்பான் தூதுவர் மற்றும் செல்வி. புமி ஈரோ – திட்ட இணைப்பாளர், பாசிக் அவர்களுக்குமிடையில் 2014ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ம் திகதி கொழும்பிலுள்ள தூதுவருடைய இல்லத்தில் கையொப்பமிடப்பட்டது.

* * *

மேலதிக தகவல்களுக்கு, தயவு செய்து

ஜப்பான் தூதராலய பொருளாதார ஒத்துழைப்புப் பிரிவுடன்

தொடர்பு கொள்ளவும் - Tel: 01-269-3831~3 (ext. 225)